


**05. 01. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேச கட்டமைப்பிலும், சமூக பொறுப்பிலும் தேசிய மாணவர் படையினர் முக்கிய பங்காற்றி வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. திருச்சியில் பி.ஜே.பி. சார்பில் நடைபெற்ற மோடி பொங்கல் விழா நிகழ்ச்சியில் கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித்ஷா இன்று பங்கேற்றார்.

3. மின்னணு சந்தைகள் மூலம் ஈரோட்டு மஞ்சளை நாடுமுழுவதும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் கல்லூரி மாணாக்கருக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு. க ஸ்டாலின் சென்னையில் இன்று பிற்பகல் துவக்கி வைக்கிறார்.

5. கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டு போட்டிகள் டையூ, கோக்லா கடற்கரையில் இன்று தொடங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

சி.பி.ராதாகிருஷ்ணன்

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் தேசிய மாணவர் படையினர் சிறப்பான பங்களிப்பு வழங்கியதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய மாணவர் படையின், குடியரசு தின அணிவகுப்பு முகாமில் இன்று உரையாற்றிய அவர், தேசத்தின் பெருமையையும், இறையாண்மையையும், மக்களின் பாதுகாப்பையும், ஆப்ரேஷன் சிந்தூர் பறைசாற்றியதாக எடுத்துரைத்தார்.

ஒற்றுமை, ஒழுக்க நெறிமுறைகளுடன் செயல்படும் தேசிய மாணவர் படையினர், தேசப்பற்றையும், பொறுப்புத்தன்மையும், இளையோரிடையே பரப்பி வருவதாக பெருமிதம் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய சீருடை அமைப்பான தேசிய மாணவர் படை உருவான காலம் தொட்டு மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாக அவர் புகழாரம் சூட்டினார்.

மலை ஏறுதல், சாகச நிகழ்வுகள், மாணவர் பரிவர்த்தனை நிகழ்ச்சிகள், பேரிடர் மீட்புப்பணிகள் போன்றவற்றில் இப்படையினரின் சிறப்பான செயலாக்கத்தை அவர் பாராட்டினார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் ! கடலோர தூய்மை ! இல்லந்தோறும் மூவர்ண கொடி ! போதைப்பொருள் ஒழிப்பு ! போன்றவற்றில் என்.சி.சி. மாணாக்கர் அளப்பறிய சேவையாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

சைபர் மற்றும் ட்ரோன் தொழில்நுட்பங்களை கையாள்வதில் இப்படையினர் முன்னேறி வருவதாக எடுத்துரைத்தார்.

தேச கட்டமைப்பிலும், சமூக பொறுப்பிலும் தேசிய மாணவர் படையினர் தொடர்ந்து முன்னிலை வகிப்பார்கள் என்றும் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

<u>அமித்ஷா</u>

திருச்சியில் பி.ஜே.பி. சார்பில் நடைபெற்ற மோடி பொங்கல் விழா நிகழ்ச்சியில் பி.ஜே.பி. மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு. அமித்ஷா இன்று பங்கேற்றார்.

மன்னார்புரம் ராணுவ மைதானத்தில் நடைபெற்ற ஆயிரத்து
8 பானை பொங்கல் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திரு. அமித்ஷா சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டார்.

ஆயிரக்கணக்கான பி.ஜே.பி. தொண்டர்கள் குடும்பத்துடன் இதில் பங்கேற்று பொங்கல் வைத்ததையும், தமிழக கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளையும் அமைச்சர் பார்வையிட்டார்.

முன்னதாக திரு. அமித்ஷா, திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் சுவாமி திருக்கோவில் மற்றும் திருவாணைக்காவல் அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் மத்திய அமைச்சர்கள் திரு. பியூஷ்கோயல், திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால், திரு, முரளீதர் மோஹல், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல்.முருகன், பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தேசிய மகளிர் அணித்தலைவர் திருமதி. வானதி ஸ்ரீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்விற்கு பின்னர் திரு. அமித்ஷா டெல்லி புறப்பட்டு சென்றார்.

முன்னதாக திருச்சி பயணத்தின் ஒருபகுதியாக அஇஅதிமுக அமைச்சர் திரு. எஸ்பி.வேலுமணி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகளை திரு. அமித்ஷா சந்தித்து பேசினார்.

❖❖❖❖❖❖❖❖❖

அஸ்விணி வைஷ்ணவ்

நாட்டின் மின்னணு உற்பத்தி 6 மடங்காகவும், ஏற்றுமதி 8 மடங்காகவும், கடந்த 11 ஆண்டுகளில் அதிகரித்துள்ளதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

46 மின்னணு உற்பத்தி திட்டங்கள், கணினி, சர்வர், கைப்பேசி தயாரிப்பு போன்றவை நம்நாட்டை மிகப்பெரிய உற்பத்தி மையமாக முன்னெடுத்துச் சென்றுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

செமி கண்டக்டர் ஆலைகள் இந்த ஆண்டு வர்த்தக உற்பத்தியை தொடங்கவுள்ளதாகவும், மின்னணு உற்பத்தி துறையில் வேலைவாய்ப்புகள் பெருமளவு அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

வடிவமைப்பு, உற்பத்தி, செயலாக்கம், பயன்பாடு முறைகள், நுண்மின் தொழில் நுட்பம் போன்ற மின்னணு பிரிவுகளில் நம்நாடு மிகப்பெரிய நாடாக வளர்ச்சிக்கண்டு வருவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

இந்திய கடலோர காவல்படையின் மாசு கட்டுப்பாட்டு கப்பலை, மத்திய பாதுபாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று கோவாவில் தொடங்கி வைத்தார்.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட சமுத்திர பிரதாப் என்ற பெயரிலான இந்த கப்பல் கடல் மாசை தடுப்பதோடு, கடல்சார் சட்டங்கள் நடைமுறைப் படுத்துவது, தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது, நாட்டின் பொருளாதார மண்டலத்தை பாதுகாப்பது போன்ற பணிகளை மேற்கொள்ளும்.

70 சதவிகித உள்நாட்டு பயன்பாட்டை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கப்பலில் தேடுதல் பணிகளுக்காக கூடுதலாக ஹெலிகாப்டர் தளமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்

கடல்சார் பணிகளுக்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் ஒட்டுமொத்த கருவியாக இந்த கப்பல் திகழ்கிறது என்று கூறிய திரு. ராஜ்நாத் சிங், சுயசார்பு பாரதத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றும் பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

<u>ஷிவ்ராஜ் சிங் சௌஹான்</u>

மின்னணு சந்தைகள் மூலம் ஈரோட்டு மஞ்சளை நாடுமுழுவதும் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் மாவட்டத்தில் வேளாண் கண்காட்சியை பார்வையிட்ட அவர், விவசாயிகள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியதுடன் கோரிக்கை மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.

இப்பகுதிகளில் விளையும் மஞ்சளை பரிசோதிப்பதற்காக தரமான ஆய்வகம் இம்மாவட்டத்தில் உருவாக்கப்படும் என்றும், குளிர்பதன கிடங்கு அமைக்க பரிந்துரை செய்யப்படும் என்றும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கென அறுவடை உலர்த்துதல், பதப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள புதிய இயந்திரங்கள் உருவாக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

நாட்டின் வளர்ச்சி பாதையில் அரசின் கொள்கைகள் ஆக்கப்பூர்வமான மாற்றங்களுடன் சீர்திருத்தங்களின் ஆண்டாக மேம்பட்ட நிலையில், 2025-ம் ஆண்டில் எரிசக்தி துறையில் மேம்பாடு குறித்த சிறப்பு செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

நாட்டின் எரிசக்தியை உள்ளடக்கிய மின்சாரம், அணுசக்தி, தூய்மைசக்தி பிரிவுகளில் நீண்ட காலமாக நிலுவையில் இருந்த சீர்த்திருத்தங்கள் செயல்படுத்தப் பட்டு, அணுசக்தி பிரிவில் சாந்தி மசோதா வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

இதன் காரணமாக அணுசக்தி துறையில் தனியார் பங்கேற்பதற்கான கதவுகள் திறக்கப்பட்டதோடு பாதுகாப்பு பொறுப்புத் தன்மைக்கான நெறிமுறைகளும் வலுப்படுத்தப்பட்டன.

2027-ம் ஆண்டு நாட்டின் அணுசக்தி திறன் 10 மடங்கு அதிகாரிக்கும் வகையில் நம் தேசம் முன்னேறிச் செல்வதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

தேசிய அரிய வகை தாதுப்பொருள் இயக்கத்தின் மூலம் இதுவரை நீண்டகாலமாக புறக்கணிப்பில் இருந்த கனிமங்களின் மீது தனி கவனம் செலுத்தப்பட்டது.

மின் திருத்த சட்ட மசோதா 2025-ன் மூலம், மின் விநியோகம், மின்வடப் பாதை நவீனமயம் மற்றும் நிதி ஒழுங்குமுறைக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டது.

புத்தாக்க எரிசக்தி பிரிவில் உலகளாவிய முன்னோடி நாடாக நாம் உருவெடுத்ததோடு, சூரிய மின்சக்தி திட்டங்கள் மூலம் தூய்மையான எரிசக்தி விரிவாக்கம், வீடுகள், பண்ணைகள், தொழிற்சாலைகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

சென்ற ஆண்டின் மத்தியில் மொத்த புத்தாக்க எரிசக்தி திறனில் இந்தியா சர்வதேச அளவில் 4-வது இடத்திற்கு முன்னேறியதோடு, காற்றாலை, சூரிய மின்சக்தி, புதை படிவமற்ற எரிபொருள் பயன்பாட்டிலும் முன்னிலை பெற்றது.

இதன் காரணமாக 2030-ம் ஆண்டு இலக்கை நம்நாடு முன்கூட்டியே எட்டியதோடு, உலகளாவிய எரிசக்தி பிரிவில் முதன்மை நாடாக தடம் பதித்து, எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தி தனிமுத்திரையை பதித்தது.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - மடிக்கணினி

தமிழகத்தில் 10 லட்சம் கல்லூரி மாணாக்கரின் திறன் வளர்ச்சி டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக மடிக்கணினிகள் வழங்கும் உலகம் உங்கள் கையில் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு. க ஸ்டாலின் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று பிற்பகல் துவக்கி வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து திருச்சி உட்பட பல்வேறு மாவட்டங்களில் மாநில அமைச்சர்கள் மாணாக்கருக்கு மடிக்கணினிகளை வழங்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖

மு.பெ. சாமிநாதன்

தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் மாநிலத்தில் திருக்குறள் வாரம் உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுவதாக இத்துறைக்கான அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மதுரை தமுக்கத்தில் உள்ள தமிழன்னை சிலைக்கு அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய அவர், தமிழறிஞர்கள், சான்றோர்கள், மாணாக்கர் பங்கேற்ற தமிழ்ச்சங்க பதாகை பேரணியை துவக்கிவைத்தார்.

இந்நிகழ்வில் வணிகவரித்துறை அமைச்சர் திரு. மூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ கண்ணப்பன்

ராமநாதபுரம் மாவட்டம் சீதகாதி விளையாட்டு மைதானத்தில் 12 கோடியே 35 லட்ச ரூபாய் மதிப்பிலான புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளை மாநில வனத்துறை அமைச்சர் திரு.ராஜகண்ணப்பன் இன்று துவக்கி வைத்தார்.

நகர்புற உள்ளாட்சிகளுக்கான விளையாட்டு உபகரணங்களையும் அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

## அன்பரசன்

மாணாக்கர் உலகளாவிய திறன்களை கற்று தேர்ந்திட வகை செய்யும் பல்வகை தொழில்நுட்ப கண்காட்சியை மாநில அமைச்சர்கள் திரு.தா.மோ.அன்பரசன் திரு.கோவி செழியன் ஆகியோர் சென்னை வர்த்தக மையத்தில் இன்று துவக்கிவைத்தனர்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளை சார்ந்த 40 கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு அதில் மாணாக்கரின் புதுமையான படைப்புகள் தயாரிப்புகள் திறன்மேம்பாட்டு முன்னெடுப்புகள் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

## தண்ணீர் திறப்பு

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு சின்னாறு அணையிலிருந்து பாசனத்திற்கான நீரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் இன்று திறந்துவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

## கேலோ இந்தியா

கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டு போட்டிகள் டையூ, கோக்லா கடற்கரையில் இன்று தொடங்குகிறது.

வரும் 10-ம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் வாலிபால், கால்பந்து, கபடி உள்ளிட்ட 6 பதக்கப்பிரிவு விளையாட்டுகளும், மல்லர் கம்பம் உள்ளிட்ட 2 கண்காட்சி பிரிவு விளையாட்டுகளும் நடைபெறவுள்ளன.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் இதில் களமிறங்குகின்றனர்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖